| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி. ந.லதா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி. |

ந.க.எண். 012426 / எப்1 /2024 நாள்.15.10.2024

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2024 – 2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்தல் – கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:23.09.2024.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி அவர்களுக்கு அனுப்பிய கடிதம், நாள்.27.09.2024.

------

பார்வையில் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், 2024–2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கரது விவரங்களை 24.09.2024 முதல் 15.10.2024 வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறுஅறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில் ஒரு சில பள்ளிகளின் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன எனத் தெரியவருவதால், **பத்தாம்வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கு 25 .10.2024 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது.** இதுவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வழங்கப்படும் **கடைசி வாய்ப்பாகும். இதன்பின்னர், இப்பணிக்காக எக்காரணம் கொண்டும் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது.**

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் அனைவரும், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை 25.10.2024-க்குள் நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/-
இயக்குநர்

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம்
   -தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   - தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்